**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT AND SESSIONS COURT, RANIPET. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII, Cr.P.C)
**SPLCC.No.18/2025 - PW-40**

| | |
|---|---|
| Name | திரு.சதிஷ் |
| Father Name | இமாச்சலம் |
| Village /Area | Vellore |
| Taluk | Vellore |
| Occupation | Business |
| Age | 47 |
| Religion | Hindu |
| Aadhar Card No. | 4425 6554 3333 |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of 22.01.2026.

**எதிரிகள் 3,4,7 முதல் 10, 15 ஆஜர். 5, 6, 11 முதல் 14 எதிரிகள் ஆஜர் இல்லை. பா.நா.சு.சு பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் ஏற்கனவே ஆரணி, ஆக்சிஸ் வங்கி கிளையில் இணை மேலளாராக 2009ம் ஆண்டில் இருந்து 2014ம் ஆண்டு வரை பணிபுரிந்தேன். அதன் பிறகு நான் என்னுடைய வங்கி பணியை இராஜினாமா செய்துவிட்டு, தற்போது வேலூர், காந்தி நகரில் வசித்துக்கொண்டு, வியாபாரம் செய்கிறேன். 2012ம் ஆண்டு வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸ் வழக்கு சம்மந்தமாக Demand Draft and Statement சம்மந்தமாக என்னிடம் வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் கேட்டார். நான் ஆய்வாளரிடம் வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸின் வங்கி கணக்கு நகல், 4 Demand Draft, அந்த Demand Draft எடுக்க கொடுக்கப்பட்ட சலான் ஆகியவற்றை கொடுத்தேன். நான்

கொடுத்த வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸின் வங்கி கணக்கு நகல் **அ.சா.ஆ.37** ஆகும்.

நான் கொடுத்த 16.10.2008 தேதியிட்ட Demand Draft No.007397 **அ.சா.ஆ.38** ஆகும். அதற்குரிய சலான் **அ.சா.ஆ.39** ஆகும்.

நான் கொடுத்த 29.10.2008 தேதியிட்ட Demand Draft No.007486 **அ.சா.ஆ.40** ஆகும். அதற்குரிய சலான் **அ.சா.ஆ.41** ஆகும்.

நான் கொடுத்த 01.11.2008 தேதியிட்ட Demand Draft No.007534 **அ.சா.ஆ.42** ஆகும். அதற்குரிய சலான் **அ.சா.ஆ.43** ஆகும்.

நான் கொடுத்த 01.11.2008 தேதியிட்ட Demand Draft No.007535 **அ.சா.ஆ.44** ஆகும். அதற்குரிய சலான் **அ.சா.ஆ.45** ஆகும். மேற்படி அ.சா.ஆ.38, அ.சா.ஆ.42, அ.சா.ஆ.44 ஆகிய Demand Draftகள் 483010100020101 என்ற வங்கி கணக்கில் இருந்தும், அ.சா.ஆ.40 ஆகிய Demand Draftயை 483010200002257 என்ற வங்கி கணக்கில் இருந்தும் எடுக்கப்பட்டுள்ளது. எங்கள் வங்கியில் உள்ள வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸ் வங்கி கணக்கு எண்.483010200001106 ஆகும். வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸ் வங்கி கணக்கு எண்.483010200001106ல் அ.சா.ஆ.42, அ.சா.ஆ.44 ஆகிய Demand Draftகளின் தொகை வரவு வைக்கப்பட்டுள்ளது. இது சம்மந்தமாக என்னை 09.04.2012 தேதி வேலூர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு ஆய்வாளர் விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை 3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பில் –**

Demand Draft No.007397 அ.சா.ஆ.38ன் தொகையும் வெங்கடேஷ்வரா எலக்ட்ரிகல்ஸ் அன்ட் ஹார்டுவேர்ஸ் வங்கி கணக்கு

எண்.483010200001106ல் 20.10.2008ல் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால், சரிதான். இந்த விவரம் அ.சா.ஆ.37ல் 16வது பக்கத்தில் உள்ளது என்றால், சரிதான். ஒரு நபர் அவருடைய வங்கி கணக்கில் இருந்து யாருக்கு வேண்டுமானலும் Demand Draft எடுத்து கொடுக்கலாம் என்றால், சரிதான். Demand Draftயை பெறும் நபர் அவர் பெயரில் உள்ள எந்த வங்கி கணக்கிலும் Demand Draftயை செலுத்தி பணம் பெற்றுக்கொள்ளலாம் என்றால், சரிதான். Demand Draftயை எடுத்ததிலோ, Demand Draftயை வங்கி கணக்கில் செலுத்தி பணம் வரவு வைக்கப்பட்டதிலோ இந்த வழக்கில் எந்த விதிமீறலும், முறைகேடுகளும் இல்லை என்றால், சரிதான்.

**குறுக்கு விசாரணை 12, 15 எதிரிகள் தரப்பில் –**

3 முதல் 11, 13, 14 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது.

**மறு விசாரணை –**

இல்லை.

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness and admitted by him/her to be correct.

M SELVAM

Principal District Judge, Ranipet
Digitally signed by M SELVAM
DN: cn=M SELVAM, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN

Principal District and Sessions Judge,
Ranipet